# "நீலாவணன் காவியங்கள்: நவீன தமிழ்க் காவியங்களின் அடிப்படையில் ஒரு நோக்கு"

**Supervisor**
*Dr. MAM. Rameez,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Mrs. AA. Sithy Nazeera,*
*Department of Languages,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

## ஆய்வுச் சுருக்கம்

காப்பியம் என்பது, அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு வகை உறுதிப் பொருள்களோடு தன்னிகரில்லாத் தலைவனைப் பற்றிப் பாடப்படும் பேரிலக்கியமாகும். தமிழ் இலக்கிய வரலாற்றில் பல காவியங்கள் தோற்றம் பெற்றுள்ளன. காவியங்களை மரபு ரீதியான காவியங்கள், நவீன காவியங்கள் என இருவகையாகப் பிரிக்கலாம். தண்டியலங்காரம் கூறும் காவிய இலக்கணங்களுக்கு ஏற்ப அமைந்தவை மரபு ரீதியான காவியங்களாகும்.

உள்ளடக்கத்திலும் உத்திமுறையிலும் உருவப்பரப்பிலும் மரபு ரீதியான காவியங்களில் இருந்து வேறுபட்டுக் காணப்படும் காவியங்களே நவீன காவியங்களாகும்.. ஈழத்தில் மஹாகவி, முருகையன், நீலாவணன், எம்.ஏ.நு'.மான் முதலானோர் நவீன காவிய மரபுக்கு வித்திட்டவர்களாவர். நீலாவணனின் காவியங்களே இங்கு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இவரின் காவியங்கள் எளிய பதம், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொதுசனங்கள் விரும்பும் மெட்டு, நவீன சிந்தனை என்பவற்றினைக் கொண்ட நவீன காவியங்களாக விளங்குகின்றன. நவீன காவியங்கள் எனும் பார்வையில் நீலவணனின் காவியங்கள் இதுவரை எவராலும் ஆய்வு செய்யப்படவில்லை. அந்த வகையில் இவ்வாய்வு முக்கியம் பெறுகின்றது.

நீலாவணனின் காவியங்களில் நவீன காவியங்களின் பண்புகள் எந்தளவுக்குக் காணப்படுகின்றன, தமிழில் தோற்றம்பெற்ற நவீன காவியங்களின் வரிசையில் நீலாவணனின் இடம் என்பனவற்றை வெளிக்கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாய்வில் முதலாம் நிலைத் தரவாக நீலாவணனின் மூன்று காவியங்களையும் ஏனைய நவீன தமிழ்க் காவியங்களையும் இரண்டாம் நிலைத்தரவாக நவீன காவியங்கள் தொடர்பாக வெளிவந்த நூல்கள், கட்டுரைகள் என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வில் விளக்கமுறை, சமூகவியல், மொழியியல் அணுகுமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

நீலாவணனின் காவியங்களில் நவீன காவியங்களுக்கான இலக்கணங்கள் சிறப்பாக அமைந்து காணப்படுவதோடு, ஈழத்து நவீன காவியப் படைப்பாளிகள் வரிசையில் நீலாவணனுக்கென தனியானதொரு இடம் உண்டு என்பதை இவ்வாய்வு உறுதிசெய்கிறது.

**Key words**: நவீன தமிழ்க் காவியங்கள், காவியங்கள்